1978 செப்டம்பர் 9]

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் :

(அ) ஒரு அதிகாரி.

(ஆ) இல்லை. இவரை மாற்றுவதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

அறநிலையங்களால் மருத்துவ மனைகள் திறப்பு.

*வினு எண். 125—திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா :

அரசினர் உதவியோடு தனிப்பட்ட அறநிலையங்கள் மருத்துவ மனை தொடங்கும் திட்டத்தின் கீழ் மருத்துவ மனை தொடங்க எத்தனை விண்ணப்பங்கள் அரசிற்கு வந்துள்ளன ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : மக்கள் நல்வாழ்வு, குடும்ப நலத்துறை இயக்குநருக்கும் அரசுக்கும் 15 விண்ணப்பங்கள் வந்துள்ளன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.— ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி * இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

(2) தகவல் கோரல்

(அ) தூத்துக்குடி அனல் மின் நிலையம் 'கன்வேயர் பெல்ட்' தயாரிப்பு.

(திரு. ஏ. ஆர். மாரிமுத்து எழுந்தார்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் ஸீரோ அவர் (Zero hour) உண்டு என்று நினைத்துக்கொண்டு பேச ஆரம்பிக்காதீர்கள். நமக்கு ஸீரோ அவர் கிடையாது.